DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 21/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : மூவேந்திரன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 02.01.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 2nd January 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.**

முதல்விசாரணை:

நான் தற்போது மகேந்திரவாடியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் விசாரணையில் 24.10.2015ம் தேதி காலை 10.30 மணிக்கு நானும், எங்கள் ஊரை சேர்ந்த இளங்கோ என்பவரும் எங்கள் ஊர் சர்ச் அருகே நின்றபோது அங்கு வந்த போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும் அதில் நானும், இளங்கோ என்பவரும் கையொப்பம் செய்ததாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**